**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 231/2021 P.W.1 / LW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கருப்பையன் | **Caste** | : | |
| **Father's Name** | : | நடேசன் | **Calling** | : | |
| **Village** | : | செருமங்கலம் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.02.2024**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை பார்க்கிறேன். விபத்தில் இறந்து போன நபர் என்னுடைய அண்ணன் ஆவார். ஆஜர எதிரியை எனக்கு தெரியும். இவர் தான் விபத்தை ஏற்படுததியவர் என்பதை தெரிந்து கொண்டேன். கடந்த 2019 ஆம் வருடம் தேதி , மாதம் ஞாபகம் இல்லை. காலை 10.00 மணியளவில் யாரோ பெயர் தெரியாத நபர் எனக்கு போன் செய்து எனது அண்ணனுக்கு அடிப்பட்ட விபரத்தை என்னிடம் தெரிவித்தார். செருமங்கலம் விஏஓ ஆபிஸ் அருகே உடையார் தெருவில் இருந்து மன்னார்குடி நோக்கி டிவிஎஸ் எக்சல் வண்டியில் மேற்கிலிருந்து கிழக்காக ரோட்டின் வடக்கு பக்கம் வேலைக்காக போய் கொண்டிருந்தார். அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி தஞ்சாவூரில் இருந்து மன்னார்குடி நோக்கி வந்த வேன் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் என் அண்ணன் ஓட்டிய வண்டியில் பின்பக்கம் மோதி விபத்தை ஏற்படுத்தியது. அதில் என் அண்ணன் தூக்கி எறியப்பட்டு பின் மண்டை பகுதியில் அடிப்பட்டு இரத்தக்காயத்துடன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். சம்பவம் பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்தபோது என் அண்ணன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். சம்பவ இடத்தில் ஆஜர் எதிரியை யாரும் தாக்கிவிடக்கூடாது என்று அங்கு இருந்த ஊர்க்காரர்கள் மறைத்து வைத்தியிருந்தனர்.

2) நீதிமன்றததில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உ்ளள கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**1)** இந்த சம்பவம் எதுவும் எனக்கு நேரிட்டு தெரியாது என்றால் - சரிதான். தற்போது அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகார் யார் எழுதினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதில் உள்ள கையொபபம் மட்டும் என்னுடையது தான்.

**2)** இந்த புகாரை என் அண்ணன் மகன் கணேசன் என்பவர் எழுதினார். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. என் அண்ணனுக்கு இருச்சக்கர வாகனம் ஓட்டுவதற்கான லைசன்ஸ் இல்லை என்று சொன்னால் - சரிதான்.

3) நான் சொல்வது போல் சம்பவம் இல்லை எதன்றும், அன்றைய தினம் ஒரு மாருதி Desire கார் மன்னார்குடியில் இருந்து தஞ்சாவூர் நோக்கி வந்த கார் என் அண்ணன் ஓட்டிய இருச்ச்ககர வாகனமும் மோதி கொண்ட போது அதனால் என் அண்ணன் சென்ற வாகனம் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் - சரியல்ல. இறந்துபோன என் அண்ணனுக்கு விபத்து இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக என் அண்ணன் மகன் மற்றும் போலீசார் சொல்லி கொடுத்தின் பேரில் புகார் தாயர் செய்யப்பட்டது எ்னறு சொன்னால் - சரியல்ல. இருச்சக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் என் அண்ணன் ஓட்டிய வாகனத்தை Desire கார் மீது மோதாமல் இருப்பதற்காக வாகனததை திருப்பி இந்த விபத்து ஏற்படுகிறது என்று சொன்னால் - சரியல்ல. பார்க்காத சம்பவத்தை மற்றவர்கள் சொல்லி கொடுத்ததின் பேரில் விபத்து இழப்பீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-------------

M. Sureshkarthik

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 231/2021 P.W.2 / LW8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சுபாஷ் | **Caste** | : | |
| **Father's Name** | : | சுப்பையன் | **Calling** | : | |
| **Village** | : | செருமங்கலம் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 36 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.02.2024**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடை வைத்துள்ளேன். விபத்தில் இறந்து போன நபர் என்னுடைய மாமா ஆவார். விபத்து சம்பந்தமாக விசாரிக்கும் போது காவல் நிலையத்தில் பார்த்தேன். கடந்த 13.05.2019 ஆம் தேதியன்று காலை 09.00 மணியளவில் செருமங்கலம் விஏஓ ஆபிஸ் அருகில் நடந்த விபத்தை நான் பார்க்க சென்ற போது அதே தேதியில் விபத்து நடந்து ஒரு மணி நேரத்தில் சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து அதற்கு சாட்சியாக நானும், தர்மராஜ் என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தோம்.

2) நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அசா-ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** : **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**1) எனது மாமா விபத்தில்** இறந்த பிறகு நான், தர்மராஜ் , கருப்பபையன் ஆகியோர் காவல் நிலையம் சென்றோம் என்றால் - சரிதான். அங்கு வைத்து விசாரிக்கவில்லை. நாங்கள் காவல் நிலையத்தில் வைத்த தான் கையொப்பம் செய்தேன் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு,
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட
நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து

காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-------------

M. Sureshkarthik

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 231/2021 P.W.3/ LW9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | முருகையன் | **Caste** | : | |
| **Father's Name** | : | நல்லப்பன் | **Calling** | : | |
| **Village** | : | செருமங்கலம் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 65 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.02.2024**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்க்கிறேன். விபத்தில் இறந்து போன நபர் என்னுடைய ஊர்க்காரர். ஆஜர் எதிரியை நான் பார்த்தில்லை. கடந்த 13.05.2019 ஆம் தேதியன்று காலை 09.00 மணியளவில் நான் கடைத்தெருவில் நின்று கொண்டிருந்தபோது ராஜவேல் விபத்தில் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என்றும், அவரது உடலை மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருப்பதாக தொலைப்பேசி மூலமாக கேள்விப்பட்டு மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றபோது ராஜவேல் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தபோது அதில் சாட்சியாக இருந்து நான் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/------------

M. Sureshkarthik

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.